**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி**
**OS.1/2014 . நாள்.21.08.2024**

போச்சம்பள்ளி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு ஆஜர். நீதிமன்றத்தில் கிரேடு 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. நசீம் பேகம் அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது. உரிமையியல் விசாரணை சட்டம் பிரிவின் கீழ் விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | மூர்த்தி | **வயது** | 47 |
| **த/பெ. க/பெ.** | பக்தவச்சலம் | **மதம்** | |
| **முகவரி** | கண்ணுகானூர் | **தொழில்** | விவசாயம் |

**பி.சா.1 ஆஜர். வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

எனது தாத்தா பெயர் கோவிந்தசாமி நாயுடு. எனது பாட்டி பெயர் கமலம்மாள் ஆகும். அவர்களுக்கு சரசு மற்றும் எனது தகப்பனார் பக்தவச்சலம் பிள்ளைகள் ஆவார். எனது தாத்தா.பாட்டி இறந்துவிட்டார்கள். சரசு இறந்துவிட்டார். சரசுக்கு பிரகாஷ், விஜயகுமார், மகாராஜா,குணசேகரன், மகேந்திரன் ஆகியோர் வாரிசுகள் ஆவார்கள். இந்த வழக்கின் வாதிகள் ஆன கீதா, கவிதா எனது சகோதரிகள் ஆவார்கள். 3-ம் பிரதிவாதி ரம்யா எனது சகோதரி ஆவார். 4-ம் பிரதிவாதி சாந்தா எனது தாயார் ஆவார். தாவா சொத்துக்கள் ஆதியில் எங்கள் மூதாததையர்கள் வழிவந்த சொத்து என்று சொன்னால் சரிதான். வழக்கு சொத்துக்களை பொருத்து மகேந்திரன் என்பவர் என் மீதும், பிரகாஷ், விஜயகுமார், மகாராஜா, குணசேகரன், என்னுடைய தகப்பனார் பக்தவச்சலம் சகோதரி ரம்யா ஆகியோர் மீது இந்நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.37/2018 தாக்கல் செய்தார் என்று சொன்னால் சரிதான். அந்த வழக்கானது பாகப்பிரிவினை கேட்டு தாக்கல் செய்யப்பட்டது. அந்த வழக்கின் நானும் எனது தகப்பனாரும் ஆஜர் ஆகி எதிர்வழக்குரை தாக்கல் செய்தோம். என்னிடம் காட்டப்படும் பிராதின் சான்றிட்ட நகல் தான் மேற்படி வழக்கில் போடப்பட்ட பிராது ஆகும். **மேற்படி பிராது வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி வழக்கில் என்னால் தாக்கல் செய்யப்பட்டு எனது தகப்பனாரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சான்றிட்ட நகல் என்னிடம் காட்டப்படுவதாகும். **மேற்படி எதிர்வழக்குரை வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி எதிர்வழக்குரையில் வழக்கு சொத்துக்கள் கோவிந்தசாமி நாயுடு மற்றும் கமலம்மாளின் சுயார்ஜ்ஜித சொத்துக்கள் அல்ல என்றும் அது

மூதாதையர்கள் வழி பிதுராஜ்ஜித சொத்துக்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். எனது தாத்தா கோவிந்தசாமியின் பூர்வீகம் வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், நெல்லாத்துப்பட்டி என்ற கிராமம் என்று சொன்னால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. நான் சிறுப்பிள்ளையாக இருந்தேன். அங்கு எனது தாத்தாவிற்க்கு பூர்வீக சொத்துக்கள் இருந்தது என்றும் அதை விற்றுவிட்டு வழக்கு சொத்துக்களை கோவிந்தசாமி நாயுடு மற்றும் கமலம்மாள் பெயரில் கிரையம் பெற்றதாக மேற்படி எதிர்வழக்குரையில் கூறியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். வழக்கின் வாதிகள் எனது பெற்றோர் மற்றும் நான் எனது சகோதரி, 3-ம் பிரதிவாதி ஆகியோர் கூட்டு குடும்பமாக வசித்து வருகிறோம் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்துக்களை பொருத்து கோவிந்தசாமி மற்றும் கமலம்மாள் எவ்வித ஆவணங்களையும் எழுதி வைக்கவில்லை என்று சொன்னால் சரிதான். கீதாவிற்க்கு திருமணம்மாகி 30 ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. கவிதாவிற்க்கு திருமணம் ஆகி 25 ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. ரம்யாவிற்க்கு திருமணம்மாகி 20 ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. வழக்கு சொத்துக்கள் எங்களுது கூட்டு அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இருந்து வருகிறது என்று சொன்னால் சரியல்ல.

2.நாங்கள் கூட்டுக்குடும்பமாக இருந்தபோது வாதிக்கும், ரம்யாவிற்க்கும் திருமணம் ஆகியது என்று சொன்னால் சரிதான், கூட்டுக் குடும்பத்தின் கர்தாவாக எனது தகப்பனார் பக்தவச்சலம் இருந்தார் என்று சொன்னால் சரிதான். வழக்கு சொத்தை பொருத்து வாதிகள் பாகம் கேட்கும் வரை எனக்கும் வாதிகளுக்கும் எவ்வித பிரச்சனையும் இல்லை அதற்க்கு பிறகு தான் பிரச்சனை ஏற்ப்பட்டது. அதுவரை விவசாய நிலங்களை வந்து பார்த்து அதில் வரும் விளைச்சலை கொடுப்போம் என்று சொன்னால் விவசாய நிலங்களை பார்க்கமாட்டார்கள். அதில் வரும் தானியத்தையும் கொடுக்கமாட்டோம் ஆனால் வருவார்கள் போவார்கள். தாவா சொத்துக்களில் செய்யும் செலவுகளுக்கு வாதிகள் அவர்கள் பாகத்திற்க்கு செலவுக்கு பணம் கொடுப்பார்கள் என்றும் அதில் வரும் வருமானத்தில் அவர்கள் பாக வருமானத்தை கொடுப்போம் என்று சொன்னால் சரியல்ல. பாகம் கேட்டு பிரச்சனை ஏற்ப்பட்டது என்று சொன்னால் சரிதான். ஆவணம்மானது ரம்யா பெயரிலும், என்னுடைய பெயரிலும் தனித்தனியாக ஏற்ப்படுத்தப்பட்டுள்ளது. வாதிகள் பெயரில் எவ்வித ஆவணமும்

ஏற்ப்படுத்தப்படவில்லை. வழக்கு சொத்துக்கள் மூதாதையர் சொத்துக்கள் என்பதால் எனது பெயரிலும், எனது சகோதரி ரம்யா பெயரிலும் தானாப்பத்திரம் எழுதி கொடுக்க எனது தகப்பனார் பக்தவச்சலத்திற்க்கு எவ்வித தனிப்பட்ட உரிமையும் இல்லை என்று சொன்னால் எனது தகப்பனாருக்கு உரிமை உள்ளது. எனது பெயரிலும் எனது சகோதரி ரம்யா பெயரிலும் 13.02.2013 தேதியில் ஏற்ப்படுத்தப்பட்டுள்ள தானப்பத்திரம் சட்டப்படி செல்லக்கூடியது என்று சொன்னால் சரியல்ல. கூட்டுக்குடும்ப சொத்துக்களை பொருத்து பாகப்பத்திரம் தான் எழுத முடியும் என்றும், தானப்பத்திரம் எழுதி தர இயலாது என்று சொன்னால் சரியல்ல. எனது பெயரில் 4 1/2 ஏக்கர் தானப்பத்திரம் எழுதி கொடுக்கப்பட்டுள்ளது. எனது தங்கை ரம்யா பெயரில் 27 சென்ட் தானப்பத்திரம் எழுதி கொடுக்கப்பட்டுள்ளது. எனது பெயரிலும், எனது தங்கை பெயரிலும் தானப்பத்திரம் மோசடியாக ஏற்ப்படுத்தப்பட்டது என்றும் வாதிகளின் கையெழுத்தை மேற்படி ஆவணத்தை நானே போட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் அது தவறானதாகும். அவர்கள் தான் கையெழுத்து செய்தார்கள். மேற்படி ஆவணத்தில் உள்ள கையெழுத்துக்கள் வாதிகள் கையெழுத்துக்கள் கிடையாது என்றும் மேற்படி விவரங்கள் வழக்கு தாக்கல் செய்யும் போது தான் வாதிகளுக்கு தெரியும் என்று சொன்னால் அது தவறனாதாகும். இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் தாத்தாவும், பாட்டியும் எனது தகப்பானருக்கு உயில் எழுதி வைத்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான். அந்த உயில் எந்த தேதியில் எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால் தற்போது நினைவில் இல்லை. மேற்படி உயிலானது பதிவு செய்யப்பட்டதா அல்லது பதிவு செய்யப்படவில்லையா என்று எனக்கு நினைவில் இல்லை மேற்படி உயிலானது நான் சிறுப்பிள்ளையாக இருக்கும்போது எழுதியதாகும். மேற்படி உயில் ஆவணத்தை நான் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை.

3.நான் அசல் வழக்கு எண்.37/2018 வழக்கில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் வழக்கு சொத்துக்கள் எனது தாத்தாவிற்க்கு பிதுராஜ்திமாக பாத்தியப்பட்டதாக கூறியுள்ள நிலையில் இந்த வழக்கில் வழக்கு சொத்துக்கள் எனது தாத்தாவிற்க்கு சுயார்ஜ்ஜிதமாக பாத்தியப்பட்டது என்று பொய்யாக கூறியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்துக்கள் கோவிந்தசாமி நாயுடு, கமலம்மாவின்

சுயார்ஜ்ஜித சொத்துக்கள் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. எனது பெயரிலும் எனது சகோதரி ரம்யா பெயரிலும் உள்ள தானப்பத்திரம் வாதிகளின் உரிமையை வழக்கு சொத்துக்களில் எவ்வகையிலும் கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல. எவ்வித விசாரணையும் மேற்கொள்ளாமல் மோசடியாக வழக்கு சொத்துக்களுக்காக பட்டா வழங்கப்பட்டதால் அது வாதிகளை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல. 10.12.2013 தேதி எனது பெயரிலும், எனது சகோதரி பெயரிலும் ஏற்படுத்தப்பட்ட தானப்பத்திரத்தை ரத்து செய்து வாதிகளின் பாகத்திற்க்கு 2/5 பங்கு பாகத்தை எழுதி கொடுக்க சொல்லி என்னிடமும் எனது தகப்பானிரிடமும் கேட்டார்கள் என்று சொன்னால் சரிதான். எனது சகோதரிகள் பாகம் கேட்டு நாங்கள் கொடுக்க மறுத்ததால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்று சொன்னால் அவர்கள் கையெழுத்து செய்து கொடுத்ததால் நாங்கள் கொடுக்க மறுத்தோம். எனது தகப்பனார் 05.02.2020 ஆம் தேதி இவ்வழக்கில் உள்ள இதர தரப்பினர்களை வாரிசாக விட்டு இறந்துவிட்டார் என்று சொன்னால் சரிதான். இவ்வழக்கு சொத்துக்களில் எனது தகப்பானருக்கு பங்கு உள்ளது என்றும் அந்த சொத்தில் எங்கள் அனைவருக்கும் பங்கு உள்ளது என்று சொன்னால் சரியல்ல. தாவா வழக்கில் எனது தகப்பனார் இறப்பிற்க்கு பிறகு தாவா சொத்துக்களில் 12/25 என பங்கு கேட்டு திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. அவ்வாறு திருத்தம் மேற்கொண்டதற்க்கு மறுப்பு தெரிவித்து கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. வழக்கு சொத்துக்களில் வாதிகளின் பங்கை பிரித்து கொடுக்க நானும் மற்ற பிரதிவாதிகளும் சட்டப்படி கடமைப்பட்டவர்கள் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்துக்களில் வழக்கிற்க்கு பிறகு வீடு கட்டியுள்ளதாக கூறியுள்ள நிலையில் மேற்படி வீடானது கூட்டுக் குடும்ப வருமானத்தில் இருந்து கட்டப்பட்டுள்ளது என்று சொன்னால் அது பொய்யானதாகும், வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் வழக்கிற்க்காக ஜோடிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. பி.சா.ஆ.1 ஆவணத்தில் சாந்தா, கீதா என்று போடப்பட்டுள்ள கையெழுத்துக்கள் வேறு மையினால் மேலெழுத்து செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் அது தவறானதாகும். அவர்கள் தான் கையெழுத்து செய்துள்ளார்கள்.

4.பட்டா மாறுதல் உத்தரவு தாக்கல் செய்யவில்லை. வாதிகளின் பாகத்தை ஏமாற்றவேண்டும் என்பதற்க்காக மோசடியான சங்கதிகளை கூறி எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. வாதிகளின் வழக்கு அனுமதிக்கப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து
காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென
ஒப்புக்கொண்டார்.

ஒம்/– எஸ். வி. சண்முகநாதன், பி.காம்., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.